செ.வெ.எண்: 39 நாள்: 13.02.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தையை பராமரித்து வளர்க்க கருணை இல்லத்திடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் தமிழ்நாடு அரசு தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் ஆதரவற்ற குழந்தையை கருணை இல்லத்திடம் தத்து கொடுக்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.02.2017) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆதரவற்ற குழந்தையை கருணை இல்லத்திடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை செக்போஸ்ட் அருகில் உள்ள குப்பைத்தொட்டியில் பிறந்து 2 நாட்களான பெண் குழந்தை கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டு சைல்டு லைன் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் 24.12.2016 முதல் புதுக்கோட்டை அரசு இராணியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. மேலும் இக்குழந்தையை பாதுகாப்பாக பராமரிக்கும் வகையில் மதுரை அழகுசிறை கிளாரிசன் கருணை இல்ல தத்து நிறுவனத்திடம் தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குழந்தையை சிறப்பாக பராமரித்து வளர்க்க சம்மந்தப்பட்ட நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**